Registered as a Newspaper
பக்கங்கள் 16 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 94

புதன்கிழமை
28 பெப்ரவரி 2024

மாசி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"தொட்டதுக்கெல்லாம் எல்லாரும் புறக்கணிப்பு எண்டால் சனங்கள் என்னதான் செய்யிறது?"

சபாநாயகருக்கு எதிரான பிரேரணை

# முன்னேறுகின்றது எதிரணி; முறியடிப்புச் சமரும் தீவிரம்!

கொழும்பு, பெப்ரவரி 28

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக, பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு பெருகி வருகின்றது.

15

விபத்துச் சாவுகளின் எதிரொலி

## தனியார் பேருந்தின் அனுமதி பறிப்பு

### ஆளுநர் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் தனியார் பேருந்து ஒன்றில் பயணித்த இளைஞர் தவறிவிழுந்து உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் பேருந்தின் வழித்தட அனுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது. 15

இன்றுமுதல் வடக்கில்

## தனியார் பேருந்துகள் சேவைப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

முறையான பேருந்து தரிப்பிடம் இல்லாததால் இன்று புதன்கிழமை முதல் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறாது என வடஇலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சி.சிவபரன் தெரிவித்துள்ளார். 15

## தூக்கிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 28

வட்டுக்கோட்டைப் பகுதியில் 57 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணை 15

2023 இல்

## எய்ட்ஸ் தொற்றால் யாழில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், பெப். 28

எய்ட்ஸ் தொற்றுக் காரணமாக, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒருவர் கடந்த வருடம் உயிரிழந்துள்ளார். யாழ்.போதனா மருத்துவமனை வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன. 15

## வலிந்து சீண்டாதீர்கள்; விளைவு விபரீதமாகும்!

### கடற்படையின் அடாவடித்தனத்துக்கு சரவணபவன் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 28

அமைதியை விரும்பும் மக்களை இலங்கைக் கடற்படையினர் சீண்டிக் கொண்டிருக்கக்கூடாது. மக்களின் வயிற்றில் அடித்து விகாரையில் வழிபாடு நடத்துமாறுதான் புத்தபெருமான் போதித்துள்ளாரா? இவ்வாறான அக்கிரமங்களையும் அட்டூழியங்களையும் மக்கள் தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை ஸ்ரீலங்கா கடற்படையினர் புரிந்து 15


கால்நடைகளுக்கு

## கிளிநொச்சியில் மீண்டும் பெரியம்மை!

கிளிநொச்சி, பெப். 28

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு மீண்டும் பெரியம்மை நோய்த் தொற்று பரவ ஆரம்பித்துள்ளது என்று 15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்டு வயல் நிலமாக்கப்படும் குளம்!

## காஞ்சிரமோட்டை கிராமமக்கள் குற்றச்சாட்டு

**வவுனியா, பெப்.28**

**வவுனியா வடக்கு, காஞ்சிரமோட்டைப் பிரதேசத்திலுள்ள குளம் ஒன்று தனிநபர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் அந்தக் குளத்தின் கீழ் உள்ள விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளன என்றும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

வவுனியா வடக்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மருதோடை கிராம அலுவலர் பிரிவில் காஞ்சிரமோட்டை கிராமம் உள்ளது. 1977ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்னிலங்கையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமாக இடம்பெயர்ந்த 300 தமிழ்க் குடும்பங்கள் காஞ்சிரமோட்டை மற்றும் அதன் அருகிலுள்ள காட்டுப் பூவரசங்குளம், நாவலர் பண்ணை போன்ற கிராமங்களில் காந்தீயம் அமைப்பால் குடியமர்த்தப்பட்டிருந்தன.

தற்போது 40 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தநிலையில், அங்கு நீண்டகாலமாக புனரமைக்கப்படாது இருந்த பண்ணைபுளியங்குளம் என்கின்ற குளம் தற்போது தனிநபர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டு வயல் நிலமாக மாற்றப்படுகின்றது என்றும் அங்கு வசிக்கும் பொதுமக்களும், மருதோடை கமக்கார அமைப்பினரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குற்றச்சாட்டுகளை அடுத்து நேற்று முன்தினம் அங்கு சென்ற கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் விமலரூபன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் குழுவினர், குளத்தின் அணைக்கட்டு அகற்றப்பட்டு குளம் ஆக்கிரமிக்கப்படுவதை அவதானித்துள்ளனர். மக்களின் கருத்தைக் கேட்டறிந்த அதிகாரிகள் குழுவினர், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்த கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், "தனிநபர் ஒருவர் குளத்தை ஆக்கிரமிப்பதாக அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. திணைக்கள அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர். குளத்தைப் புனரமைப்பதற்கு தேவையான நிதியை இந்த வருடத்திலேயே பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (எ-110)

## கிராம அலுவலர்களாக விரைவில் 2000 பேர்!

கொழும்பு, பெப். 28

புதிதாக 2000 கிராம அலுவலர்களைச் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ப்ரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

கிராம அலுவலர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள், பரீட்சைகள் திணைக்களத்தினால் அரச நிர்வாக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தகுதி பெற்ற சுமார் 4000 பேரை நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## வாயுத் துப்பாக்கிகள்; சிறுவர்கள் அவதானம்

கொழும்பு, பெப். 28



வாயுத் துப்பாக்கியால் சுட்டு விளையாடிய சிறுவர்களில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. காயமடைந்த சிறுவன் சத்திர சிகிச்சைக்குட்படுத்தவுள்ளார் என்று மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தங்கோவிட்ட பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைத் தவிர்க்க விவசாயிகளுக்கு இந்தத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



ஒரு மணிநேரத்தில்

## யாசகத்தின் மூலம் 20,000/= பெறும் பெண்

கொழும்பு, பெப். 28

கொழும்பில் 3 பிள்ளைகளுடன் யாசகம் பெறும் பெண்ணொருவர் ஒரு மணித்தியாலயத்தில் சுமார் 20 ஆயிரத்து 700 ரூபா வரையில் சம்பாதிக்கிறார் எனத் தெரியவந்துள்ளது.

பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகளுடன் யாசகம் பெற்ற வேளையில் குறித்த பெண்ணையும் அவரது மூன்று பிள்ளைகளையும் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியபோதே குறித்த பெண் சுமார் ஒரு மணித்தியாலத்தில் கிட்டத்தட்ட 20 ஆயிரத்து 700 ரூபாவைச் சம்பாதிப்பது தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் பாதுகாப்பிலிருந்த பாடசாலை செல்லும் வயதுடை 2 சிறுவர்களை சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்புமாறு நீதிமன்று உத்தரவிட்டதுடன் யாசகம் பெறும் பெண்ணை பிணையில் விடுவிக்குமாறும் தெரிவித்தது. (ச-இ)

## பதவி விலகினார் உத்திக

கொழும்பு, பெப்.28

அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

உத்திக பிரேமரத்னவின் பதவி விலகல் கடிதம் கிடைத்துள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (எ-44)

### திருமணத்துக்காக

## கஞ்சா விற்பனை; தாய், மகன் கைது

கொழும்பு, பெப். 28

கஞ்சா விற்பனை செய்த 24 வயது இளைஞனும் அவரது தாயும் ஜாஎல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'யுக்திய' நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழு அவர்களை கைதுசெய்துள்ளது. அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் திருமணத்துக்குப் பணம் திரட்டுவதற்காக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாகத் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## வடமராட்சி உட்கட்டமைப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வு

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்.28

வடமராட்சிப் பிரதேசத்தின் உட்கட்டமைப்புப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் ஆளுநரின் மக்கள் சந்திப்பு வடமராட்சியில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வடமராட்சிப் பிரதேசத்தில் காணப்படும் உள்ளக வீதிகள் சீரின்மை தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகள் மக்களால் முன்வைக்கப்பட்டன. விளையாட்டு மைதானம் சீரின்மை, வீதிகளுக்கான மின் விளக்குகள் பொருத்தப்படாமை, சனசமூக நிலையங்களின் தேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் சுட்டிக் காட்டப்பட்டது. துரிதகதியில் அவற்றுக்கான தீர்வுகளைக் காணுமாறு அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். (எ-26)

## பயிரழிவுகளுக்கு நிவாரணம் கிடைக்காவிடின் பட்டினிச்சாவே

### முல்லை விவசாயிகள் ஆதங்கம்

முல்லைத்தீவு, பெப். 28

கடந்த மாதங்களில் பெய்த கனமழையால் பெரும்போகத்தில் ஏற்பட்ட பயிரழிவுக்கு அரசாங்கத்தால் நட்டஈடு வழங்கப்படாவிடின் அநேகமான குடும்பங்கள் பட்டினிச் சாவையே எதிர்நோக்கும் நிலை ஏற்படும் என்று முல்லைத்தீவு விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவில் அனைவருமே விவசாயத்தை நம்பியே தமதுவாழ்க்கையைக்கொண்டு செல்கின்றனர்.

கடந்த மாதங்களில் பெய்த கனமழையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் உப உணவுச் செய்கையும் அழிவடைந்துள்ளது.

மறுபுறம் யானைகள் மற்றும் குரங்குகளும் பயிர்களை அழிக்கின்றன.

நெற்செய்கை வீழ்ச்சியுற்றமையால் அடுத்த சிறுபோகச் செய்கைக்கான விதை நெல்லைக்கூடப் பெற முடியாத நிலையில் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

எனவே அனைத்து விவசாயிகளுக்கும் அரசாங்கம் பயிரழிவு நிவாரணம் வழங்க வேண்டும்.

இல்லாவிடின் அநேகமான குடும்பங்கள் பட்டினிச் சாவையே எதிர்கொள்ள நேரிடும்- என்றனர். (ச-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்துக்குள் தீர்வு இல்லையேல் போராட்டம்

## பல்கலை. கல்விசாரா ஊழியர்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 28

**சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.**

இன்றும் நாளையும் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பல்கலைக் கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் இணைத் தலைவர் தம்மிக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றன.

ஒரு வாரத்துக்குள் எமது பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாவிட்டால் எதிர்காலத்தில் பெரும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவும் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## துப்பாக்கியுடன் பெண் கைது!

22 வயதுடைய யுவதி ஒருவர் கைத்துப்பாக்கியுடன் காலியில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதான பெண்ணிடமிருந்து 5 கைத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

குறித்த யுவதி திட்டமிட்ட குற்றச்செயல்களைப் புரியும் வலையமைப்புடன் தொடர்புபட்டவரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## 18 நாள்களில் 138,736 சுற்றுலாவிகள்

இலங்கைக்கு பெப்ரவரி மாதத்தின் முதல் 18 நாள்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 38,736 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் ரஷ்யாவில் இருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் 2 இலட்சத்து 82 ஆயிரத்து 53 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## பணியாளர்கள் இன்மை 7 விமானங்கள் நேற்று இரத்து

கொழும்பு, பெப். 28

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குப் புறப்படவிருந்த 7 விமானங்கள் நேற்று இரத்துச்செய்யப்பட்டுள்ளன என்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதில் 6 விமானங்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமானவை எனத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள அதிகளவான பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் சிற்றூழியர்களின் தாமதமான செயற்பாடுகள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## 2 நாள்களாக எலியைத் தேடிய எயார்லைன்ஸ்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் ஒன்றில் எலியொன்று தென்பட்டதையடுத்து, தரையிறக்கப்பட்ட விமானத்தில் இரண்டு நாள்கள் எலியைத் தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

லாகூர்-கொழும்பு விமானத்திலேயே அந்த எலி காணப்பட்ட நிலையில் எலியை அப்புறப்படுத்தும் வரை விமானத்தை இரண்டு நாள்களுக்கும் மேலாக சேவையில் ஈடுபடுத்த முடியாமலிருப்பதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தலைவர் அசோக் பத்திரகே தெரிவித்துள்ளார்.

விமான உற்பத்தியாளர் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டபோது இரசாயனங்கள் தெளித்து இரண்டு நாள்களுக்கு விமானத்தை நிறுத்தி வைக்குமாறு கூறப்பட்டது என்று அவர் தெரிவித்தார். இதனால் சிரமத்துக்குள்ளான பயணிகளிடம் மன்னிப்புக்கோருகிறேன் என்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தலைவர் தெரிவித்தார். (ச-இ)

## நீர்க்கட்டணம் அதிகரிக்காது

கொழும்பு, பெப். 28

இந்த வருடம் நீர்க்கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அறிமுகப்படுத்தப்படவுள்ள உத்தேச நீர்ச் சூத்திரம் மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தாத வகையில் அமையும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## அரச நிறுவனப் பொருள்கள்; ஊழியர்களே கைவரிசை!

'மில்கோ' நிறுவனம் மற்றும் தேசிய கால்நடைகள் அபிவிருத்திச்சபை என்பவற்றில் திருட்டுகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் முன்னணி அரச நிறுவனங்களில் ஒன்றான 'மில்கோ' நிறுவனம் ஹைலன்ட் பால்மா, யோகட், பதப்படுத்தப்பட்ட பால், போத்தலில் அடைக்கப்பட்ட பால் எனப் பல்வேறு தயாரிப்புகளைச் சந்தைப்படுத்தும் நிறுவனமாகும்.

குறித்த நிறுவனங்களை இந்தியாவின் அமுல் நிறுவனத்துக்கு விற்பனைசெய்ய இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் குறித்த நிறுவனங்களின் உபகரணங்களை அவற்றின் ஊழியர்களே திருடிச் செல்வதாகத் தெரியவந்துள்ளது.

குறித்த நிறுவனங்களின் உயரதிகாரிகள் எவ்வளவோ முயற்சி செய்தும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## புதினம் தெரியுமோ?

ஆக்களை எப்பிடியெல்லாம் டிசைன் டிசைனா ஏமாத்திக் காசு உழைக்கலாம் எண்டதைப் பற்றி 'சதுரங்க வேட்டை' எண்டொரு படம் வந்ததைப் பார்த்திருப்பியள். ஆனால் சதுரங்கத்தை வைச்சே காசு பாக்கலாம் எண்டதை எங்கடை ஆக்களிட்டத்தான் அந்தப் படம் எடுத்தவை படிக்கோனும். நேற்று எங்கட பேப்பரில சதுரங்கப் போட்டியில நடந்த குளறுபடி பற்றி ஒரு செய்தி வந்ததெல்லோ. அதை வாசிச்சுப் போட்டு கனபேர் போனிலை நிறைய முறைப்பாடு. அதுகளை விசாரிச்சுக் கொண்டே போனால், இப்பிடியெல்லாம் காசு உழைக்கலாமா எண்டு தலையே சுத்தத் தொடங்கிட்டுது.

வடமராட்சியில ஏற்கனவே ஒரு சதுரங்கக்கழகம் இயங்கிக் கொண்டிருக்கேக்க, சதுரங்கத்துக்கு ஒரு அக்கடமி வைக்கவெண்டு சொல்லி வந்தவாதான் இந்த அம்மணியாம். வந்தவா தனிய ஒண்டும் செய்யேலாது எண்டு விளங்கினதால, நெல்லியடியில இருக்கிற சதுரங்கக்கழகத்தோட சேர்ந்து போட்டியள் வைக்கிறன் எண்டு வெளிக்கிட்டிருக்கிறா. இதுக்கு முதலும் ஒரு போட்டி வைச்சிருக்கிறா. நிறையப்பேர் அந்தப் போட்டிக்கு வந்திருக்கினம். ஆனால் ஏற்பாடுகள் ஒண்டும் ஒழுங்கில்லை. போட்டியை நடத்த சிங்கள ஆக்களைக் கொண்டந்தும் எல்லாம் படு சொதப்பல். போதாக்குறைக்கு இந்தப் போட்டியை நடத்தின அம்மணி ஹிட்லர் மாதிரி நடந்திருக்கிறா. போட்டிக்கு வந்த ஒரு பொம்பிளைப் பிள்ளை யூரின் போறதுக்கு பெர்மிசன் கேட்டிருக்குது. ஆனால் 'ஒண்டுக்கும் விடேலாது' எண்டு அம்மணி சொல்லி, அந்தப்பிள்ளையை வெளியில போகவிடாமல் செய்திருக்கிறா. எவ்வளவு நேரம் தான் அந்தச் சின்னப் பிள்ளையால அடக்க ஏலும்? அது உள்ளுக்கையே யூரின் இருந்திட்டுது. அதுக்குப் பிறகு இந்த விசயம் பெரிசாகி, அம்மணிக்கு ஆக்கள் அடிக்காத குறையா பேசி, 'இப்பிடி பிள்ளையளை வதைக்கக் கூடாது' எண்டு சொன்னவை. அந்தப் போட்டியாலயே அவாக்கு லட்சக் கணக்கில காசு சேர்ந்ததாம். ஆனாலும் மெடல், சேர்ட்டிபிக்கெட், பரிசு எண்டு அவாக்கு இருபத்தையாயிரத்துக்குள்ளதான் செலவு. கொழும்பில இருந்து கூட்டியந்த ஆக்களுக்கு குடுத்த சம்பளத்தையும் கழிச்சால் எப்பிடியும் அந்த ஒரு போட்டியில மட்டும் ஒரு லட்சமாவது அவாவின்ர கையில மிஞ்சியிருக்குமாம்.

அந்த ருசியிலதான் பிறகு அதே கழகத்தின்ர லேபிளுக்க ஒளிச்சு நிண்டுகொண்டு இன்னொரு போட்டியை வைக்க வெளிக்கிட்டவா. 5 வயது, 7 வயது, 11 வயது, 15 வயது எண்டு பிள்ளையளிண்ட வயசுப்படி ஐஞ்சு பிரிவா போட்டி நடக்குமெண்டுதான் அறிவிச்சவை. நோர்மல் போட்டி, 3 நிமிசத்தில நடக்கிற மின்னல் வேகப் போட்டி எண்டு ரண்டுவிதமான போட்டியில ஒருபிள்ளை விளையாடலாம். ஆனால் ரண்டுக்கும் தனித்தனியா ஆயிரம் ரூபா கட்டோனும். ரண்டும் சேர்த்து விளையாடுற தெண்டால் ஆயிரத்து ஐநூறு ரூபா கட்டோனுமாம். 200 பிள்ளையளுக்கு கிட்ட காசு கட்டினவை. அப்பிடிப்பாத்தால் 3 லட்சத்துக்கும் மேல அம்மணியின்ர கையில போயிருக்கும். இப்பிடிக் காசு வந்தவுடன, சடாரெண்டு கதையை மாத்தி, 11 வயதுக்கு கீழ்ப்பட்டவை, 11 வயதுக்கு மேற்பட்டவை எண்டு ரண்டு குரூப்பா மட்டும் தான் போட்டியெண்டு சொல்லியிருக்கினம். கனபேருக்கு இந்தத் தகவல் போகவே இல்லை, அதைவிட போட்டிக்கு கட்டின காசு வந்திட்டா, விண்ணப்பப்படிவம் கிடைச்சிட்டுதா, போட்டி எங்க நடக்கும் எண்டெல்லாம் போட்டியை நடத்தினவை காசு கட்டிப் பதிஞ்ச பிள்ளையளுக்கு ஒழுங்காச் சொல்லவேயில்லை. கனபேர் தூர இடங்களில இருந்தெல்லாம் வந்தவையாம். 11 வயதுப் பிள்ளை 21 வயதுக்காரரோடையும் விளையாட வேணும் எண்டா நாங்கள் வந்தே இருக்க மாட்டம், காசும் நட்டம், நேரமும் நட்டம் எண்டு தூர இடத்தில இருந்து வந்தவை புலம்பினவையாம்.

எப்பிடியெல்லாம் எங்கட சனங்கள் உழைக்குதுகள் எண்டு பார்த்தியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. இராசபுரத்துக்கு பாடசாலை பஸ்

## புலம்பெயர் அமைப்பு நன்கொடை

வவுனியா, பெப். 28

வவுனியா வடக்கு இராசபுரம் கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மாணவர்களின் பயணத்தை இலகுபடுத்தும் வகையில் லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக பேருந்தொன்று வழங்கப்பட்டுள்ளது.

அங்குள்ள 50 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்துக்கு சிரமங்களுக்கு மத்தியில் காட்டுப் பாதையூடாக நடையாகவும், துவிச்சக்கர வண்டிகளிலும் சென்று கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர்.

இந்தநிலையில் அவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக குறித்த பேருந்து கையளிக்கப்பட்டது.

இந்தப் பேருந்து இராசபுரம் கிராமத்திலிருந்து தினமும் பாடசாலை சேவையில் ஈடுபடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-18)



# பிரிட்டன் தூதுவருடன் ரெலோ சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப்.28

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய தூதுவருக்கும், ரெலோ அமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக், சமாதானம் மற்றும் மனித உரிமைக்கான செயலாளர் ஹென்றி டொனாட்டி ஆகியோர் கலந்து கொண்டதுடன் ரெலோவின் சார்பில் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், கட்சியின் உப தலைவர் ஹென்றி மகேந்திரன் மற்றும் கட்சியின் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைகள் பேரவையின் அமர்வு, தமிழ்மக்களுக்கான நீதியைப் பெறுவதற்கான பிரித்தானியாவினுடைய பங்கு, சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-66)




# 'மழலைத் தமிழ் மலர்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 28

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரனின் 'மழலைத் தமிழ் மலர்' நூல் வெளியீடு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பெருமாள் கோயிலுக்கு முன்பாக அமைந்துள்ள பாலர் முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது.

கல்விக் காருண்யன் எஸ். பி.நாகரத்தினம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன், யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் ஆகியோர் நூலின் முதற்பிரதியைப் பெறவுள்ளனர். (ச)

# ரமழானை முன்னிட்டு போர் நிறுத்த ஒப்பந்தம்



நியூயோர்க், பெப்.28

முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் இணங்கியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. போர் நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான விடயத்தை ஹமாஸ் அமைப்பு ஆய்வு செய்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை காஸாவில் பாதிப்புக்குள்ளாகியுள்ள மருத்துவமனைகள் மற்றும் வெதுப்பகங்களை புனரமைப்புச் செய்வதற்காக 500 உதவி வாகனங்கள் அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம், ஹமாஸ் மற்றும் இஸ்ரேலியப் படைகளுக்கிடையில் மோதல் வெடித்திருந்தது. மோதல் காரணமாக இரு தரப்பிலும் உள்ள அப்பாவி மக்கள் கொல்லப்படுவதாகவும், அதைத் தவிர்ப்பதற்கு இருதரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்தவேண்டும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி பைடன் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பணவரவு இருந்தாலும் செலவுகளும் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களுடன் அனுசரித்துச் செல்லவும். இடையூறுகள் நீங்கும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வியாபாரம் வழக்கம் போல் நடைபெறும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படலாம். விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** மகிழ்ச்சியான நாள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு வாழ்க்கைத்துணையுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லவும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. இடையூறுகள் விலகும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். அலைச்சல் உண்டாகும். சில சங்கடங்கள் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

# உக்ரைன் செல்லவுள்ள மேற்குலகப் படைகள்!

பரிஸ், பெப்.28

உக்ரைனுக்கு மேற்குலகநாடுகள் தங்கள் படையினரை அனுப்பக் கூடும் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மனுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார். பரிசில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் மக்ரோன் இவ்வாறு தெரிவித்துள்ளார். படையினரை உக்ரைனுக்கு அனுப்புவது தொடர்பாக எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. ஆனால் அதற்கான வாய்ப்புகளைத் தவிர்க்கமுடியாது என பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யா போரில் வெல்வதைத் தடுப்பதற்காக எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம் எனத்தெரிவித்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதி நான் அதை மிகுந்த உறுதிப்பாட்டுடன் தெரிவிக்கின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்புவதற்கான புதிய கூட்டணி உருவாகவுள்ளது என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி அறிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழா, யாழ்ப்பாணம் கலட்டியில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தின் தலைமைக் காரியாலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வடமாகாணப் பிரதித் தபால்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார், பிரான்ஸ் வாழ் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன அங்கத்தவர் விஜயகுமார் சியாமளா தம்பதிகள், யாழ்.மாவட்டச் செயலக சமூக சேவைகள் திணைக்கள இணைப்பாளர் நடராசா ரதிகுமார், நல்லூர் பிரதேசசெயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மினி ரஜீவன், இலங்கை செவிப்புலன் வலுவற்றோர் சம்மேளனத் தலைவர் பயான் சுசந்த எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)



வயாவிளான் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு உரும்பிராய் சந்தியிலிருந்து கல்லூரி வரையான வீதியோட்ட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப)

சிறுப்பிட்டி மேற்கு, அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயமும் நாகதம்பிரான் அறநெறிப் பாடசாலையும் இணைந்து முன்னெடுத்த கலைவிழா மற்றும் பரிசளிப்புவிழா என்பன ஆலய முன்றிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலயத் தலைவர் வி. சுரேந்தர் தலைமையில் நடைபெற்றன. (ப)



## தேசிய பளுதூக்கல்:


# வவு. கோமரசன்குளம் வித்தி. மாணவிகளுக்கு பதக்கங்கள்



2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட பளுதூக்குதல் போட்டியில் வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் சாதனை படைத்துள்ளனர். இளையோர், கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவினர்களுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டி கடந்த 23ஆம், 24ஆம், 25ஆம் ஆகிய திகதிகளில் காலி போத்திவெல தேசிய பாடசாலையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகளான பா.கிசாளினி, த.வன்சிகா ஆகியோர் தங்கப்பதக்கத்தையும் க. அபிசாளினி வெள்ளிப் பதக்கத்தையும் ச.அனுஷா வெண்கலப் பதக்கத்தையும் தனதாக்கினர். (ச-110)

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனத்தி லுள்ள செவிப்புலன் மற்றும் விழிப்புலன் குன்றிய மாணவர்களின் வாழ்விடமான இனிய வாழ்வு இல்லத்தின் மரதன் ஓட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (எ-13)





சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர் லயன். மருத்துவர் வேலாயுதபிள்ளை தம்பித்துரையின் நினைவாக இலவச மூக்குக் கண்ணாடிகள் சாவகச்சேரி டச்சு வீதி, ஐங்கரன் மண்டபத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சு. நிதிகேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கழக உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (ப-9)



கிளிநொச்சி மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்குத் தரம்– 6 இல் கற்கவுள்ள மாணவர்களை இணைக்கும் நிகழ்வு, குறித்த பாடசாலை அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவியும் கிளிநொச்சி கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலய அதிபருமான விஜயநிதி செல்வானந்தன் கலந்துகொண்டார். (ப-13)



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் கால்கோள் விழா, அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி கொமர்ஷல் வங்கி நிறைவேற்று அதிகாரி பா.அஜீபன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி புஸ்பலதா ஜெகநாதன், பழைய மாணவன் வி. எஸ். சுரேஷ், பழைய மாணவரும் தென்மராட்சி கல்வி வங்கி செயற்பாட்டாளருமான ந.சஞ்செயன் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

தெல்லிப்பழை, பெப்.28
தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சேக்கிழார் பெருமானின் குரு பூசையைத் தொடர்ந்து " அகக் கோவிலில் பெருமானை எழுந்தருளச் செய்து வழிபட்ட நாயனார்" என்னும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர் க. கைலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ப)



## மேய்ச்சல் தரவையின்றி கால்நடைகள் அந்தரிப்பு!

**முல்லைத்தீவு, பெப். 28**
**முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள் குளத்தில் மேய்ச்சல் தரவைகள் இல்லாததனால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.**

இருபோக நெற்செய்கை இங்கு இடம்பெறுகின்றது. இதனால் மேய்ச்சல் தரவையின்றி கால்நடைகள் அலைந்து திரிகின்றன.
கடந்த காலங்களில் துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டங்களில் அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் மேய்ச்சல் தரவையை அடையாளப்படுத்துமாறு கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை மேய்ச்சல் தரவையை இனங்காட்டவில்லை.
இதனால் நீண்டதூரங்களுக்கு தமது கால்நடைகளைக் கொண்டு சென்றே மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது என்றும் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர். (ச-13)

## சாவ. வணிகர் மன்ற செயற்பாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 28
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற நிர்வாக செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மன்ற நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.
மன்றத்தின் சில செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதென உபதலைவரால் கடந்த வாரம் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தப்பட்டது.
இந்நிலையில் நேற்றுமுன்தினம் நிர்வாக சபை விசேட கூட்டம் நடைபெற்று மன்ற செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

7 ஆண்டுக்கு முன்னர்

## திருடியவரை காட்டிக்கொடுத்த கைரேகை

2017ஆம் ஆண்டு நடந்த திருட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம், பிறவுண் வீதியிலுள்ள வீடொன்றில் 46 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள், தங்கச் சங்கிலி, டொலர் என்பன திருடப்பட்டிருந்தன. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், திருட்டு நடந்த வீட்டில் இருந்து கைரேகையைக் கண்டுபிடித்திருந்தனர்.
இந்தத்திருட்டுநடந்து 7 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், அந்தக் கைரேகை வேறு குற்றம் ஒன்றில் தொடர்புடைய ஒருவரின் கைரேகையுடன் ஒத்துப்போகின்றமை கைவிரல் அடையாளத் திணைக்களத்தால் கண்டறியப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

## பெண்ணின் பணம் பேருந்தில் 'அபேஸ்'

முல்லைத்தீவு, பெப். 28
முல்லைத்தீவு மாங்குளத்திலிருந்து பளை நோக்கிப் பேருந்தில் பயணித்த பெண்ணின் பணம் களவாடப்பட்டுள்ளது என்று மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுமுன்தினம் பயணித்த இலங்கை போக்குவரத்துச்சபையின் பேருந்திலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.
கைப்பையிலிருந்த 22 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஏ.ரி.எம். கார்ட் உள்ளிட்ட ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன என்றும் முறைப்பாட்டில் பெண் தெரிவித்துள்ளார். (ச-13)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 28
நவாலி ஸ்ரீநாகராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயவருடாந்தமஹோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம்10 ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)

## காஸா நிதியத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப்.28
காஸா எல்லைப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக சிறார்களுக்கான காஸா நிதியம் என்ற நிதியத்தை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இப்தார் நிகழ்வுகளுக்காக அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களினால் ஒதுக்கப்படும் தொகையை இந்த நிதியத்துக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)





## கடலில் வீசப்பட்ட 10 கிலோ தங்கம்; கைவிடப்பட்டது தேடுதல் வேட்டை

சென்னை, பெப்.28
இலங்கையில் இருந்து இந்தியாவுக்குக் கடத்தப்பட்டபோது கடலில் வீசப்பட்ட 10 கிலோ கடத்தல் தங்கத்தைத் தேடி கடந்த ஐந்து நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.
இலங்கையிலிருந்து வேதாளை நோக்கிச் சென்று கொண்டிருந்த படகொன்றை கடலில் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த மத்திய வருவாய் புலனாய்வுத் துறையினர் மடக்கிப்பிடிக்க முயன்றுள்ளனர். படகில் இருந்த மூவரில் ஒருவர் கடலில் குதித்து தப்பித்த நிலையில் இருவரை கடலோர காவற்படையினர் கைதுசெய்ய முயன்றபோது அவர்கள் கடலில் பார்சல் ஒன்றை வீசியுள்ளனர். இலங்கையில் இருந்து கடத்தி வந்த தங்கக் கட்டிகள் அடங்கிய பொதியைக் கடலில் வீசிவிட்டதாகவும், அதில் சுமார் 10 கிலோ தங்கம் இருக்கும் எனவும் அவர்கள் விசாரணையில் கூறியுள்ளனர்.
அதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை 4 நாள்களாக தங்கத்தைக் கடலுக்கு அடியில் தீவிரமாகத் தேடி வந்தனர். கடலுக்கு அடியில் கிடக்கும் பொருள்களை ஸ்கேன் செய்யும் அதிநவீன கருவிகள் கேரளாவில் இருந்து வரவழைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. அதிலும் தங்கம் சிக்காததால் கடந்த திங்கட்கிழமை தேடுதல் நடவடிக்கை கைவிடப்பட்டது என்று தெரியவருகின்றது. (எ-100)



## ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவார்

### ஹரின் திட்டவட்டம்

கொழும்பு, பெப்.28
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார். இதனை நான் உறுதியாகவே கூறுகின்றேன் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.
"ரணில் விக்கிரமசிங்க அரசியல் இராஜதந்திரம் தெரிந்தவர். பதற்றப்படமாட்டார். உரிய நேரத்துக்கு உரிய வகையில் வருவார். அது குறித்து எவரும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. மே முதலாம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி பெரிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது. அப்போது பலர் எம்முடன் மேடையேறுவார்கள். இது அரசியலில் திருப்பமாக அமையும்" என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வல்லரசுகளின் ஆதரவை ஒன்றிணைப்பது யார்?

“இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில், கொழும்பை நிச்சயம் பொறுப்புக்கூறச் செய்வோம். அதற்குரிய அத்தனை நடவடிக்கைகளும் சர்வதேச நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாகச் செயற்படுத்தப்படும்” என்று தெரிவித்திருக்கின்றார் கனேடிய கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான பியர் பொலியர். கனடா அதன் வெளிவிவகாரக் கொள்கைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் ஒரு நாடு. லிபரல் கட்சியாக இருந்தாலும்சரி அல்லது கன்சர்வேட்டிவ் கட்சியாக இருந்தாலும் சரி, யார் ஆட்சிக்கு வந்தாலும் சிற்சில விட்டுக்கொடுப்புகள்தான் மேற்கொள்ளப்படுமே அன்றி, முற்றான மாற்றங்கள் சாத்தியப்படாது. ஆதலால், தற்போதைய கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ போன்று எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலியரும் ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவார் என்று நம்பலாம்.

ஈழத்தமிழர்களுக்கு அமெரிக்கக் காங்கிரஸினரோ அல்லது கனேடிய நாடாளுமன்றத்தினரோ ஆதரவைத் தெரிவிப்பது இதுவொன்றும் முதல்தடவையல்ல. 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட காலம்முதல் இந்தக் கோரிக்கையை - வலியுறுத்தல்களை அவர்கள் முன்வைத்தே வந்திருக்கின்றார்கள். இந்த விடயத்தில் கனடா ஒருபடி மேற்சென்று ‘இலங்கையில் இறுதிப்போரின்போது தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர்’ என்று தீர்மானமும் நிறைவேற்றியிருக்கின்றது. ஆனால், அவர்களின் இந்தக் குரலால் ஈழத்தமிழர்களுக்காக எதையாவது சாதிக்க முடிந்ததா? என்ற கேள்வியும் இங்கெழுவது தவிர்க்க முடியாததாகின்றது. தமிழர்களுக்கு எதிரான நெருக்குவாரங்கள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன, தமிழர்களின் வாழ்விடங்களில் - அவர்களின் தாயகத்தில் சிங்கள - பௌத்த பேரினவாதத் திணிப்பு நாளுக்குநாள் வேகம்பெற்றபடியே உள்ளது. தமிழர்களின் காணிகள் அடாத்தாகக் கையகப்படுத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன, அரசியல் கைதிகள் இன்னமும் சிறைகளில்தான் இருக்கின்றார்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் இன்னும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. ‘போதாதற்கு பொந்தனும் வந்தான்’ என்றாற் போல் இப்போது நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தின் மூலமான நெருக்குவாரங்கள் ஆரம்பித்திருக்கின்றன எனில், அமெரிக்க - கனேடியப் பிரதிநிதிகளின் எதிர்ப்பால் கொழும்பின் மீது கனதியான தாக்கத்தைச் செலுத்த முடியவில்லை என்றால், இந்த எதிர்ப்பின் பாற்பட்ட பயன்தான் என்ன?

இங்குதான் தமிழ்த்தேசியக் கட்சிகளின் செயற்பாட்டுப் பலவீனம் பட்டவர்த்தனமாகின்றது. தாயகத்திலும் புலத்திலும் ஈழத்தமிழர்களின் ஆதரவுத் தளத்தை இவர்கள் ஒன்றிணைக்கவில்லை என்பதே உண்மை. இப்போதும்கூட, “கொழும்பில் போர்க்குற்றங்களுக்கு எதிராகச் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவேன்” என்று பியர் பொலிவர் தெரிவித்து கிட்டத்தட்ட ஒரு மாதம் கடந்துவிட்டது. ஆனால், அவரது கருத்துக்கான நன்றியை - ஆதரவை - பின்னுந்துதலை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் எவரும் வெளிப்படுத்தவேயில்லை. லிபரல் கட்சியின் மீதுள்ள அதிருப்தியால் பியர் பொலிவர் கனேடியப் பிரதமராகும் காலம் மிக அருகில் என்று கருதப்படும் நிலையில், பியர் பொலிவருடனான தம் தொடர்பை தமிழ்த் தேசியக் கட்சிகள் பலப்படுத்தியிருக்க வேண்டியது ஒருவிதக் கட்டாயக்கடமை என்பது இங்கு கோடிகாட்ட வேண்டிய விடயமாகவும் அமைகின்றது.

ஈழத்தமிழர்களின் ஆதரவு மனோநிலையில் உள்ள இத்தகைய பிரதிநிதிகள் நாடுகளைக் கடந்து, கட்சிகளைக் கடந்து ஒன்றுபட்டு ஒரு பொதுப்பொறிமுறையூடாக ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுத்திருந்தால், அந்தக் குரல் இலங்கையால் கேட்கப்படாவிட்டாலும் சர்வதேசத்தின் அழுத்தத்துக்கு உள்ளாகும் விடயமாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஈழத்தமிழர்களுக்கு நீதிகேட்பவர்கள் முதலில், எமக்கு ஆதரவான ‘வல்லரசுப் பிரதிநிதிகளின்’ குரலை ஒன்றுசேர்க்கவேண்டும். கட்சிக்குள் இருக்கும் பிடுங்குப்பாடுகளைக் களைவதற்கு வக்கற்றவர்களிடம் இதுபோன்ற பெரும்பொறுப்புகளையும், உண்மையான இராஜதந்திரங்களையும் எதிர்பார்ப்பது தமிழினத்தின் சாபக்கேடே.




# தேசபந்துவின் நியமனம் அரசமைப்புக்கு முரண்!



## எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 28**

**தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு அரசமைப்புச்சபை அனுமதி வழங்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் தனது ருவிற்றர் பதிவில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச்சபையின் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் மேற்கொள்ள குறைந்தபட்சம் 5 வாக்குகள் தேவை எனக் கூறப்படுகின்றது. தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்ப தற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக 4 வாக்குகளும் எதிராக 2 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. இரண்டு உறுப்பினர்கள் வாக் கெடுப்பில் கலந்துகொள்ளாமல் புறக்கணித்துள்ளனர்.

வாக்குப்பதிவில் சமம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே சபாநாயகர் தனது வாக்கைப் பயன்படுத்த முடியும். அதன்படி தேசபந்து தென்னக்கோன் நியமன விடயம் அரசமைப்பு இரண்டாவது தடவையாகவும் மீறப்பட்டுள்ளது.

அதேவேளை, தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அரசமைப்புச் சபை அனுமதி வழங்கியது எனக் கூறப்பட்ட நிலையில் சபை அனுமதி வழங்கவில்லை என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# கார்களின் விலை உயர்வு

கொழும்பு, பெப். 28

நாட்டில் பயன்படுத்தப்பட்ட கார்களின் விலை மேலும் அதிகரித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டுக் வாகனங்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை நீடித்தால் வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் என வாகன விற்பனையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச-இ)

# இறைவரித் திணைக்களத்தில் 380 பதவி வெற்றிடங்கள்

கொழும்பு, பெப். 28

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 380 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உதவி ஆணையாளர்கள் 221 பேருக்கும் அலுவலக உதவியாளர்கள் 71 பேருக்கும் முகாமைத்துவ ஊழியர்கள் 88 பேருக்கும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# எரிபொருள் விலைச் சூத்திரம் எதிர்காலத்தில் நிவாரணம்

கொழும்பு, பெப். 28

எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு எதிர்காலத்தில் நிவாரணம் வழங்கப்படும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

விலைச்சூத்திரத்தில் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் 4வீத ஈவுத்தொகையைக் குறைத்து அந்த நிவாரணத்தை மக்களுக்கு வழங்கலாம்.

கடந்த ஆண்டு விலைச் சூத்திரத்தை நடைமுறைப் படுத்தியதால் பழைய கடனையும், வங்கிகளில்வாங்கிய கடனையும் ஈடுகட்ட முடிந்தது. இதன் பயனை மக்களுக்கு வழங்குவதற்காக எதிர்காலத்தில் துரிதமாகச் செயற்படுவோம் - என்றார். (ச-இ)

# வெள்ளவத்தையில் துப்பாக்கிச்சூடு

வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் நேற்றுக்காலை துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர்கள் ரி-56 ரக துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சம்பவத்தில்எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும்ஹோட்டலின் சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## நாளை

29.02.2024
வியாழக்கிழமை
மாசி–17

சுபநேரம் : 07.58 - 09.28
ராகுகாலம் : 01.58 - 03.28

## நாளொரு நல்வார்த்தை

நீங்கள் வெற்றியாளராக இருக்க
அழகான முகமோ, வலிமையான உடலோ
தேவையில்லை; மாறாக திறமைமிக்க
மனமும், செயற்படும் திறனும்தான் தேவை.

– ரோவன் அட்கின்சன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உமிச்சட்டி' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 28
வெல்லாவெளி விவேகானந்தனின் 'உமிச்சட்டி' சிறுகதைத் தொகுதி வெளியீடு எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு களுதாவளை பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தேசியக் கலைஞர் கலாநிதி எஸ்.கோபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, பேராதனைப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ முன்னாள் பீடாதிபதி கலாநிதி ம.அல்பிரட், கிழக்குப் பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர் க.இராஜேந்திரம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)



# பொட்டல்காடாகும் அமைதிபுரம்

## மரநடுகை செய்யக் கோரிக்கை

**முல்லைத்தீவு, பெப்.28**
**முல்லைத்தீவு, அமைதிபுரத்தில் பெருமளவு மரக்கன்றுகள் நடுகை செய்யவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மண் அகழ்வுக்காக அக்கராயன் கிழக்கின் யூனியங்குளம் பகுதியிலுள்ள அமைதிபுரம் கிராமத்தில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்ட நிலையில் அங்கு மர நடுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

துணுக்காய் பிரதேச செயலாளர் அமைதிபுரம் மரநடுகைக்கும், கரைச்சிப் பிரதேச செயலாளர் அக்கராயன் கிழக்கு மர நடுகைக்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இந்தக் கிராமங்களில் தொடரும் கிரவல் அகழ்வுக்கு தொடர்ச்சியாக அனுமதி வழங்க வேண்டாம் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-13)

**விற்பனைக்கு**
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்திய சாலைக்கு முன்பாக 15 அடி அகலமும், 100 அடி நீளமும் கொண்ட 3 மாடி கட்டடம், யாழ். மின்சார நிலைய வீதியில் CTB தரிப்பிடத்திற்கு பின்னால் 50 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 3 மாடி கடையும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0777 23 25 35



**காணி, வீடு விற்பனைக்கு**
உரும்பிராய் சிவன் வீதியில் 4 பரப்பில் அமைந்துள்ள சகல வசதிகளுடன், 5 குளியலறை கொண்ட அடுக்கு மாடி வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 074 1798 281
076 0628 748
076 176 8848
(CS 54153) A-1

# அரசமைப்பை மீறவில்லை சபாநாயகர் திட்டவட்டம்!



கொழும்பு, பெப்.28
நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உயர்நீதிமன்றத்தின் கட்டளையைப் புறக்கணிக்கவில்லை, அரசமைப்பை மீறவில்லை, நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை மீறவில்லை என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. அந்தப் பிரேரணையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றும்போது அது தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரிந்துரைகளைச் சரியாக நடைமுறைப்படுத்தாமை, அரசமைப்பு, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் மற்றும் நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை மீறியமை உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக்கொண்டே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. (எ-இ)

# 'யுக்திய' 730 பேர் கைது



கொழும்பு, பெப்.28
நாடளாவிய ரீதியில் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையில் 730 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின்போது சந்தேகநபர்களிடமிருந்து 154 கிராம் 267 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்ன், 81கிராம் 485 மில்லி கிராம் நிறையுடைய ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 526 சந்தேகநபர்களும் ஏனைய குற்றங்கள் தொடர்பில் 204 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 526 சந்தேக நபர்களில் 4 சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் புனர்வாழ்வுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தேசபந்துவுக்கு ஆதரவாக களமிறங்கும் மகாசங்கம்



பதில் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றிவந்த தேசபந்து தென்னக்கோன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் இலங்கைத் தீவின் 36ஆவது பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமைக்கு கடும் எதிர்ப்புகள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில், தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு எதிராகக் கத்தோலிக்க திருச்சபை, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட 7 தரப்பினர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களுக்கு எதிராகவும் தேசபந்துவின் நியமனத்துக்கு ஆதரவாகவும் மகா சங் கத்தினர் களமிறங்கியுள்ளனர்.

போதைப்பொருள் கட்டுப்பாடு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு "யுக்திய" நடவடிக்கை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னணியில் இவ்வாறான மனுக்களை நிராகரிக்கவேண்டும் என்பது மகா சங்கத்தினரின் நிலைப்பாடாக உள்ளது. (எ-இ)

# மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் விமானப்படை

## அங்கஜன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.28
விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவுவிழா இம்முறை வடக்கை மையப்படுத்தி நடைபெறவுள்ளது. அதை முன்னிட்டு வடக்கில் விமானப் படையின் வசமுள்ள தனியார் காணிகளை விடுவிக்க விமானப்படையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் பாதுகாப்புத் தேவைகளுக்கெனத் தேசிய பாதுகாப்பின் கீழ் காணிகளைச் சுவீகரித்து அதனை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தையிட்டியில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த காணிக்குள் சட்டவிரோதமான முறையில் விகாரையை அமைத்துள்ளனர்.

மாதகல் விகாரைக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் எனக் கடற்படையினர் தடைவிதித்துள்ளனர். பாதுகாப்புத் தரப்பினர் ஒரு மதம் சார்ந்து செயற்பட முடியாது. அது சட்டவிரோதமானது.

33 வருடங்களுக்கு மேலாகச் சொந்த இடங்களிலிருந்து வெளியேறியிருந்த மக்கள் தற்போது தான் மீள அக்காணிகளில் குடியேறி வீடுகள் கட்டியும், விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் மீளக் காணிகளைச் சுவீகரிப்பதனை ஏற்க முடியாது.

இதுதொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளோம். வலிகாமம் வடக்கில் உள்ள காணிகள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நம்புகின்றேன் - என்றார். (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
28.02.2024
புதன்கிழமை

# தென்னிந்திய கலைஞர்களின் படையெடுப்பும் சிதையப்போகும் தாயகக் கலைகளும்



ப. தர்மகுமாரன்
ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி

ஒரு இனத்தின் இருப்புக்கும், அடையாளத்துக்கும் வரலாற்றை பண்பாட்டுடன் கடத்தி செல்வதற்கும் கலைகள் எவ்வளவு இன்றியமையாதனவோ அவ்வாறே கலைஞர்களும் இன்றியமையாதவர்கள். ஆனால் இலங்கையில் குறிப்பாக தமிழர் பிராந்தியங்களில் அண்மைக் காலமாக இடம்பெறும் சம்பவங்கள், ஈழத்தமிழர்களின் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் அபாய ஒலியாகவே அமைந்திருக்கின்றன.

## அழிவுறும் கலைகள்

கலைகள் இல்லாத இனம் அடையாளம் காணப்படாத பிணம் என்பர். அவ்வாறுதான் தமிழர் தேசத்தில் கலைகள் தொலைந்தும் தொலைக்கப்பட்டும், சிதைவுக்கு உள்ளாகியுமுள்ளன.

இதனைச் சீர்செய்வதற்கு யாரும் தயாராகவில்லை. ஏனெனில் மக்கள் மயப்படுத்தப்படவில்லை. இதற்குக் காரணம் தென்னிந்தியத் திரைப்படங்கள், சின்னத்திரைகள், நாடகங்கள் எமது மக்களை ஆண்டு கொண்டிருக்கின்றமையே. இதனால் எமது கலைகள் மட்டும் சிதைக்கப்படவில்லை பண்பாடு, கலாசாரம் என்பனவும் சின்னாபின்னமாக்கப்படுகின்றன.

இளம் தலைமுறையினரின் ஒழுக்கம் கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது.

தாயகக் கலைகளை அறிந்துகொள்வதற்கும் தெரிந்துகொள்வதற்குமான வாய்ப்புகள் இல்லாது போகின்றன.

கலைகள் கண்கவர் செயற்பாட்டுக்கும், செவிநுகர் இரசனைக்கும், உள மகிழ்ச்சிக்கும் அப்பால் ஓர் இனத்தின் விடுதலை, உரிமை, மரபுவழி, அபிலாஷை என்பவற்றை உணர்வு ரீதியாக மக்கள் மத்தியில் ஆழ ஊடுருவச் செய்து அதன்பால் பயணிக்க வைத்ததும் நாம் அறிந்ததே. கலைத்துவம்மிக்க இனம் எப்பொழுதும் மகத்துவம் மிக்கதாகவே காணப்படும். அதனை யாரும் வெகு சீக்கிரம் சிதைத்துவிடமுடியாது.

இருந்தபோதும் இன்றைய நிலையில் தென்னிந்தியக் கலைஞர்களின் படையெடுப்பு எமது கலைகளுக்கு அபத்தமாகிவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

தென்னிந்தியக் கலைஞர்கள் எமது கலைகளை வளர்ப்பதற்கு உதவிகள் செய்தால் வரவேற்கத்தக்கது. ஆனால் எம்மை பார்வையாளர்களாக உருவாக்குவதை அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு அனுமதித்தால் அது எமது பணத்தைக் கொடுத்து நாமே அழிவதற்கு ஒப்பான செயல். எமது தாயக கலைகளில் ஒருசில கலைகள் உச்சம் தொட்டே காணப்படுகின்றன.

அதிலும் நாதஸ்வரம், தவில் கலையும் கலைஞர்களும் தென்னிந்தியக் கலைஞர்களுக்கு ஈடு இணையற்றவர்களாக காணப்படுகின்றார்கள். மாறாக நாடகம், கூத்து, நடனம் என்பன எம்மைவிட்டு விலகிச் செல்கின்றன. அதற்குப் பொருளாதாரப் பிரச்சினையும் மிக முக்கியமானதொன்றாகும்.

இருந்தபோதும் கலைகளை வளர்ப்பதில் அவசரகால நிலையை பிரகடனம் செய்து பாடசாலை மட்டத்தில் முன்னேற்றகரமான செயல்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். அதற்கான அழகியல் பாட ஆசிரியர்கள் நிறைவாக பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் கலைத்துவம் சமூகமயப்படவில்லை. இதற்கு பிள்ளைகளை ஈடுபடுத்துவதன் மூலம் பெற்றோர்களை கலைகளை நோக்கி இழுத்தெடுக்க முடியும். அதற்குப் பெற்றோர்களை தயார்ப்படுத்த பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், உள்ளூராட்சி மன்றங்களில் முத்தமிழ் விழாக்களை நடத்த வேண்டும்.

> தென்னிந்தியக் கலைஞர்கள் எமது கலைகளை வளர்ப்பதற்கு உதவிகள் செய்தால் வரவேற்கத்தக்கது. ஆனால் எம்மைப் பார்வையாளர்களாக உருவாக்குவதை அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு அனுமதித்தால் அது எமது பணத்தைக் கொடுத்து நாமே அழிவதற்கு ஒப்பான செயல்.

## இந்தியாவை நம்புவது தமிழினம் இழிவுக்குள்ளாகும்

இந்தியாவைப் பொறுத்தவரையில் அது தனது நலன்கருதியே செயற்படும். அது அரசியலாக, பொருளாதாரமாக, கலைகளாக இருந்தாலும் தன்னை மையப்படுத்தி தனது வளர்ச்சி மட்டுமே கருதிச் செயற்படும். இதை உணர்ந்து நாம் செயலாற்ற வேண்டும். அதற்காக இந்தியாவுடன் பகைமையை ஏற்படுத்தி எதிர்ப்பினை வெளிப்படுத்தி முரண்படுவது என்று பொருளல்ல. அவர்களின் இராஜதந்திரத்தைப் புரிந்து நாம் எமது முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னகர்த்த வேண்டும். அதற்கு எமது கலைகளை நாம் பாதுகாக்க முனைதல் முக்கியமானதாகும். பாட்டன், முப்பாட்டன் கரிகால சோழன் உலகம் பூராகவும் புலிக்கொடியை ஏற்றினான். ஆனால் தமிழ்க் குடிகளை தமிழ் நாட்டில் மட்டுமே நிறுவினான். ஆனால் தமிழினத்தின் தலைவன் உலகம் பூராகவும் தமிழ்க் குடிகளை இருத்தி புலிக்கொடியை பறக்க விட்டுள்ளான். அதனால் இலங்கைத் தமிழன் உலகம் பூராகவும் பரவி தமிழர் மரபை விதைத்து விருட்சமாக்கியுள்ளான். இதனை நாம் உணர்ந்து எமது அடையாளங்களை பாதுகாக்கவேண்டும். இதற்காக புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தமிழர் தேசத்தில் கலைக்கூடங்களை உருவாக்கி நவீன தொழில்நுட்ப வசதிகளை அதில் உட்புகுத்திக் கொடுக்கவேண்டும்.

எமது சுதேச கலைகளை வளப்படுத்தி, அதை வருமானம் பார்க்கக்கூடிய தொழிலாக மாற்றவேண்டியதுதான் இப்போதுள்ள பெருந்தேவையே அன்றி மாறாக தமிழகத்தின் திரைக்கலைஞர்களுக்குப் பின்னால் பல ஆயிரங்களைச் செலவிட்டுக் கொண்டு திரிவது அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக வளர்ச்சியில் சங்கப் பெண்கள்



**பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி**
*நிகழ்ச்சித்திட்ட தலைவர்*
*சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,*
*முகாமைத்துவம்,*
*யாழ்.பல்கலைக்கழகம், இலங்கை*

*இந்தக் கட்டுரையின் கடந்த வாரத்தின் தொடர்ச்சி இந்தவாரம் பிரசுரமாகின்றது.*



**சங்கப் பெண்கள் வீரம் செறிந்தவர்களாகவும் மேலும் தாம் பெற்ற மக்கட் செல்வங்கள் எல்லாம் அண்டம் புகழும் வீரர்களாய் இருக்கவேண்டும் என்கிற சிந்தனைப்போக்கு கொண்டவர்களாகவும் விளங்கினர். அவர்களின் மனநிலை, குணவியல்புகள் கூட ஆண்களுக்கு சமநிலைப்பட்ட தாகவே காணப்பட்டது.**

குடும்ப வாழ்க்கையில் கணவன் மனைவியினை கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் அதிகமாக மனுதர்மத்தின் வாயிலாகப் பெறப்பட்டது. பால்யப்பருவத் திருமணம், கைம்பெண்கள் மீதான கொடுமை, உடன் கட்டை ஏறுதல் போன்றன ஏற்றுக்கொள்ளமுடியாததும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததுமான மிக கொடூரமான செய்கைகளைச் செய்விக்க மானிட சமூகம் முற்பட்டது. இதில் என்ன வேடிக்கை என்றால் காசி காண்டம், உடன்கட்டை ஏறினால் அஸ்வமேத யாகம் செய்த பலன்கிடைக்கப்பெறும் எனக் குறிப்பிடுகின்றது. எனினும் அதர்வ வேதத்தில் கணவர் மனைவிக்கு இடையே சம அந்தஸ்து வழங்கப்பட்டது என்றும் கணவன், மனைவியின் சரிபாதி என்ற கொள்கையும் காணப்படுகின்றது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை மேற்கத்தேய தேசத்தவர்களினால் பெண்கள் காட்சிப் பொருளாகவும், கவர்ச்சிப் பொருளாகவும், போதை தரும் பொருளாகவும் நோக்கப்பட்டனர். இதன் தாக்கம் காலணித்துவ நாடுகளிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. எனினும் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேயரும் கிறிஸ்துவ சமயப் பெரியோரும் பெண்கள் முன்னேற்றத்தில் அதிகமான அக்கறையைக் காட்டினர். இலங்கை போன்ற காலணித்துவ நாடுகளில் பெண்களுக்கான அரசியல் வலுவூட்டல், சமூக, பொருளாதார வலுவூட்டல் போன்ற பாடவிதானங்களில் கல்வியினை வழங்குவதன் மூலமாகவே பெண்விடுதலை சாத்தியப்பாடு உடையதாகச் செய்ய வகை செய்யப்பட்டது. இலங்கையில் 1885ஆம் ஆண்டில் தோன்றிய ஏகனாங் மெரின் டி சில்வா என்ற பெண்பாலின ஆர்வலர் 1927ஆம் ஆண்டு சிலோன் பெண்கள் உரிமைச் சங்கத்தினை நிறுவினார்.

இதன்மூலமாக 1931ஆம் ஆண்டில் பெண்கள் வாக்குரிமை பெறுவதற்காக முனைப்புடன் செயற்பட்டார். சூரியன் மறையாச் சாம்ராஜ்யம் என 19ஆம் நூற்றாண்டில் அழைக்கப்பட்ட பிரித்தானியாவில் 1918ஆம் ஆண்டில் தான் பெண்களுக்கான வாக்குரிமை கிடைக்கப்பெற்றது. நிலைமை இவ்வாறிருக்கையில் கடாரம் வென்ற தமிழ் இனத்தின் முதன்மையான காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் கண்ணகி நீதி கேட்டுச் சென்றபோது பாண்டிய மன்னனின் அரச சபையில் அரசியும் அரசனும் சமமாக அக்கிராசனத்தில் விற்றிருந்தனர் என்றும் அவர்கள் இருவருமாக கண்ணகி சார் வழக்குரையை வாதங்களினைக் கேட்டுக்கொண்டனர் என்கின்ற செய்தி சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது.



**யுத்த காலத்தில் தன் கணவனையும், புதல்வனையும் போரிட வெற்றித்திலகமிட்டு போர்க்களம்புக அனுப்புவதற்கு அவர்கள் தயங்கிய தில்லை.**

இது இக்காப்பியத்தினை படைத்த இளங்கோவடிகளின் கற்பனை அல்லது உருவாக்கல் திறன் என்று எண்ணிலும்கூட இங்கு கற்பனையில் தானும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம இடம், சம அந்தஸ்து கொடுக்கப்பட்டிருப்பது வெளிப்படையாகின்றது. இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் பெண்கள் குறித்த உயரிய சிந்தனையினைக் கொண்டவர்களாக இருந்த போதும் டானியல் என்ற புரட்சி எழுத்தாளரின் அடிமைகள் என்ற படைப்பில் பெண்கள் சமூகக் கட்டமைப்பு அடிப்படையில் துன்புறுத்தப்பட்டார்கள் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலில் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகள், இன ரீதியான ஒடுக்குமுறைகள் போன்றவற்றை வெற்றிகொள்வதற்காக நடந்த ஈழப் போராட்டத்தில் தமிழின மங்கையர்கள் ஆயுதம் ஏந்திப் போராடி புறநானூறு கால வீர மங்கையர்களாகத் தம்மை முன்னிலைப்படுத்திக் கொண்டனர். களம்புகுந்து தாள்பதித்து தடைகளைத் தகர்த்தனர், காவியமாகினர். பாண்டிய மன்னன் மட்டும் பெண்ணுக்கு சம சந்தர்ப்பம் வழங்கவில்லை என அறியக் கிடைக்கிறதெனினும் எங்கள் காலத்துக் காவிய நாயகன் மங்கையர்களை வீராங்கனைகளாகக் களம் ஆட வழி அனுப்பினார்.

தமிழர் சிந்தனை வரலாற்றில் சங்க காலத்தில் பெண்தெய்வ நிலையில் தெய்வீக உணர்வோடு சமநிலைப்படுத்தப்பட்டு ஏற்றலுக்கும் போற்றலுக்கும் உரியவளாய் விளங்கினாள். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு செவ்வியல் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலும் மாதர்கள் பற்றியும் அவர்களின் வகிபங்கு, பணி பற்றியும் அதிகமாக விவாதிக்கப்பட்டுள்ளது. சங்கத்துக்கு முன்னான நூலான தொல்காப்பியத்தில் பெண் என்பவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பண்புகளின் இருப்பிடம் என்றும், அதேவேளை பெண்கள் வீரம் செறிந்தவர்களாகவும் மேலும் தாம் பெற்ற மக்கட் செல்வங்கள் எல்லாம் அண்டம் புகழும் வீரர்களாய் இருக்கவேண்டும் என்கிற சிந்தனைப்போக்குக் கொண்டவர்களாகவும் விளங்கினர். சங்க காலத்துப் பெண்களின் மனநிலை, குணவியல்புகள் கூட ஆண்களுக்கு சம நிலைப்பட்டதாகவே காணப்பட்டது. இன்று மேற்குத் தேசத்தவர்களினால் நாகரிகம் அல்லது சமூக வாழ்வியலின் தளர்வுக் கொள்கை என்று போற்றிக் கொண்டாடப்படுபவை, இற்றைக்கு 2 ஆயிரத்து 500ஆம் ஆண்டுகளுக்கு முன்னரான சங்ககாலத்தில் தமிழர்களால் சமூக அங்கீகாரத்துடன் ஏற்றுக்கொண்டு கொண்டாடப்பட்டவையே. எடுத்துக்காட்டாக கணவனும் மனையாளும் ஒன்றாகச் சேர்ந்து மது அருந்தி மகிழ்ந்திருந்தார்கள் என பட்டினப்பாலைச் செய்யுள் (106 - 108) குறிப்பிடுகின்றது. சங்ககாலத்துப் பெண்களின் மனநிலை, குணவியல்புகள்கூட ஆண்களுக்கு சம நிலைப்பட்டதாகவே காணப்பட்டது.

யுத்த காலத்தில் தன் கணவனையும், புதல்வனையும் போரிட வெற்றித்திலகமிட்டு போர்க்களம் புக அனுப்புவதற்கு அவர்கள் தயங்கியதில்லை. தொழில் பங்கீடு போன்றவற்றில் சமநிலை காணப்பெற்றது. வாணிபம், அரசியல், படைக்காப்பு போன்ற துறைகளில் ஆடவர் முகாமை செய்ய பெண்கள் அறம் ஓம்பி குடும்பம் நடத்தினர். ஆணும் பெண்ணும் சமத்துவத்துடன் வாழ்ந்தனர். சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள் ஒரு கன்னிப்பெண்ணுக்கு என்ன பொறுப்பு இருக்கவேண்டும் இல்லத்தரசிக்கு என்ன பொறுப்புகள், கடமைகள் இருக்கவேண்டும் என்றெல்லாம் எழுதப்படாத வேதமாகக் கொண்டு தமது வாழ்க்கையினை வாழ்ந்தது போல் ஒரு மூதாட்டிக்கு எத்தகைய உரிமைகள், கடமைகள் சமூகத்தில் உள்ளது பற்றியும் வகுத்திருந்தனர். வகுத்திட்டபடி அக்காலப் பெண்கள் வாழ்ந்தனர். சங்க காலத்து பெண்கள் சிறந்த கல்வியாளர்களாக, புலவர்களாக கவிஞர்களாக, அரசசபையில் சிறந்த ஆலோசகர்களாக, நாட்டியக் கலைஞர்களாக, விளங்கினார்கள். நாம் இன்று பேசுவது எல்லாம் பாரதி கண்ட புதுமைப்பெண்ணைப் பற்றியாகும். ஆனால் சங்க காலம் பல புதுமைப் பெண்களினைக் கண்டுள்ளது. அதனை சங்க காவியங்கள் குறிப்பிடத் தவறவில்லை. பெண் கவிஞர்கள் அவையில் மன்னனைப் போற்றி கவி தொடுத்து வெகுமதிகளினை மட்டும் பெற்றது

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருத்துவ கலாநிதி க.ரஞ்சன்.**
பிராந்திய தொற்றுநோய் தடுப்பு மருத்துவ அதிகாரி.
தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி






# ‘காப்பு’


## பொதுச்சுகாதார உலகுக்கு ஓர் உன்னத வரப்பிரசாதம்

‘தனியொருவனுக்கு உணவில்லை எனின் ஜெகத்தினை அழித்துடுவோம்’ என்றான் பாரதி. அந்தவகையில் உயிர் வாழ்தலுக்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவினை பாதுகாப்பாக நுகர்வது பற்றி நூலாசிரியரான பொதுச்சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றெனால்ட்டினால் எழுதப்பட்ட ‘காப்பு’ எனும் உணவுப் பாதுகாப்பு சுகாதார மேம்பாட்டு ஏடானது மிகவும் காத்திரமான விடயங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. கிட்டத்தட்ட 33 தலைப்புகளில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தநூலில் நூலாசிரியர் தனது கருத்துகளைப் பதிவுசெய்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சுகாதார முகாமைத்துவ விஞ்ஞான முதுமானிப் பட்டதாரியான நூலாசிரியர் ஆ.ஜென்சன் றொனால்ட், பதினாறு வருடங்களுக்கு மேலாக தனது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சேவையில் உணவுப்பாதுகாப்புத் தொடர்பாக தான் கற்றதும் சந்தித்ததும் மற்றும் தேடிப் பெற்றதுமான விடயங்கள் அனைத்தையும் ஒருங்கே சேர்த்து இந்த நூலைப் பொதுமக்கள் பயன் பெறத்தக்க வகையில் எளிய நடையில் உருவாகியுள்ளார்.

உணவானது உற்பத்திக்கு தயாராவதிலிருந்து உணவுத் தட்டுக்கு வரும் வரையான எல்லா விடயங்களிலும் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகின்றது என்பதை நூலாசிரியர் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். உணவு மூலம் பரவும் நோய்கள் குறித்தும், உணவு நஞ்சாதல், ஒவ்வாமை மற்றும் வேதிப்பொருள்களின் தாக்கம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் நூலாசிரியர் விரிவாக அலசுகின்றார். அத்துடன், உணவுப் பாதுகாப்பை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதையும் தனது துறைசார் புலமையினூடாக நூலாசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஆதலால், இந்த நூல் நவீனப் படுத்தப்பட்ட தகவல்கள் செறிந்த பொதுச்சுகாதார உலகுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே திகழ்கின்றது. கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்ற வேண்டியதன் முக்கியத்துவம், கழிவுகளைத் தரம்பிரித்து சேகரித்தல், திண்ம, திரவக் கழிவுகளின் அகற்றலை எவ்வாறு பாதுகாப்பாகக் கையாள்வது என்பது பற்றியும் நூலில் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது. உணவகங்களில் பதிவுகளைப் பேணுதல், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை எப்போது பயன்படுத்துதல், உணவை எவ்வாறு கொண்டுசெல்லுதல் உள்ளிட்ட விடயங்களும் நூலில் நிபுணத்துவ ரீதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தண்ணீர்ப் பாதுகாப்புத் தொடர்பான தகவல்களும் நூலில் தரப்பட்டுள்ளன.





‘காப்பு’ என்ற இந்த நூலிலுள்ள விடயங்கள் வயது வேறுபாடின்றி அனைவரும் இலகுவாக வாசித்தறியக் கூடியதாக உள்ளதோடு, இந்த விடயங்கள் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக பணியாற்றும் அதிகாரிகளுக்கும் உணவக உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் அரும்பெரும் பொக்கிஷமாக அமையும் என்பதில் மறுகருத்தில்லை.

# சிறப்பாக இடம்பெற்ற தைப்பொங்கல் விழா





கடந்த ஆண்டு முதல் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் பிரமாண்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ‘தைப்பொங்கல் விழா’ இந்த ஆண்டும் அண்மையில் கொண்டாடப்பட்டுள்ளது. பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பும் தனித்தனி பானையாக 18 பானைகள் ஒரே மைதானத்தில் வைக்கப்பட்டு பாரம்பரிய முறைப்படி இந்தப் பொங்கல் விழா இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக வெங்கலசெட்டிகுள பிரதேச செயலாளர் இ.பிரதாபனும், சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் முனைவர் இ.நா.ஸ்ரீஞானேஸ்வரனும் கலந்து சிறப்பித்தார்கள்.

முட்டி உடைத்தல், கிளித்தட்டு உட்பட இன்னும் பல பாரம்பரிய விளையாட்டுக்களும், நூறு மாணவர்கள் இணைந்து முன்னெடுத்த நடனமும் விழாவைச் சிறப்பித்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பெரியசாளம்பன் கிராமத்தின் வீதிகளை திருத்தக்கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.28

ஒட்டுசுட்டான், பெரியசாளம்பன் கிராமத்தின் வீதிகளைப் புனரமைக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பெரியசாளம்பன் கிராமத்தின் உள்வீதிகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதால் அங்கு வாழ்கின்ற 115 குடும்பங்களும் போக்குவரத்துத் தொடர்பாக பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குறித்த கிராம வீதிகளைப் புனரமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குறித்த கிராமமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-13)



## மணியங்குளத்தின் கீழ் 116 ஏக்கரில் சிறுபோகம்

கிளிநொச்சி, பெப்.28

அக்கராயன்குளம் இந்தமுறை, கமநலசேவை நிலையத்துக் குட்பட்ட மணியங்குளத்தின் கீழ் 116 ஏக்கரில் சிறுபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கையின் அளவைத் தீர்மானிக்கும் கலந்துரையாடல் ஒன்று மணியங் குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ப-113)


## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில்
இயங்கி வருகின்ற
வல்வை முதியோர் இல்லத்திற்கு
ஆண், பெண் பராமரிப்பாளர் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்.
தகுந்த சம்பளம் பேசித்
தீர்மானிக்கப்படும். (CS 54022) S-1

| | |
|---|---|
| 077 810 6857 | 077 154 2067 |
| 021 226 5551 | 075 563 1451 |


## பெயர்மாற்றம்

இல-1, முதலாம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **மரியதாஸ் கிறிஸ்ரியானா** ஆகிய நான் எனது பெயரை **மரியதாஸ் கிறிஸ்ரில்டா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மரியதாஸ் கிறிஸ்ரில்டா** என்றே கையொப்பம் இடுவேன் என ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**மரியதாஸ் கிறிஸ்ரில்டா**

(CS/54154) J-1

## கண்ணீர் அஞ்சலி




பிறப்பு 03.07.1949 இறப்பு 22.02.2024

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சிந்துஜா கௌரீதரன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**ஸ்ரீமதி தங்கமீனாட்சியம்மா மஹாகணபதீஸ்வரக்குருக்கள்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

## மரண அறிவித்தல்

தோற்றம் 05.07.1981 மறைவு 27.02.2024



### நவரத்தினம் மயூரன்

கோயிலாக் கண்டி மேற்கு, தச்சன்தோப்பு வேலம்பிராயினைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் மயூரன் அவர்கள் நேற்று (27.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நவரத்தினம் காலஞ்சென்ற கோணேஸ்வரி தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற அருள்தாஸ் - நகுலேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், சயந்தாவின் அன்புக் கணவரும், அஸ்விதாவின் அன்புத் தந்தையும், செந்தூரன், லச்சுமணன், நந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நிருஜா, நிலானி, செந்தூரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில், நீர்வேலி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக வேலம்பிராய் பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 29378) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 22.04.1950 மறைவு 26.02.2024



### பாக்கியம் சிவஞானம்

(ஓய்வு நிலை ஆசிரியை, யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்)

ஆவரங்கால் கிழக்கு புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் சிவஞானம் (செல்வப்பாக்கியம்) அவர்கள் கடந்த (26.02.2024) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் அமரர் நாகமுத்து சிவஞானம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான நாராயணபிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் மகளும், அமரர்களான நாகமுத்து - மாதியம்மை தம்பதிகளின் மருமகளும் அமரர் மனோகரன் அவர்களின் அன்புச் சகோதரியும், தர்ஷிகா (கனடா), ஜனகன் (ஊடகர்) ஆகியோரின் அருமைத்தாயாரும், மணிமாறன் (கனடா), சுமிந்தா (SLT, Jaffna) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சங்கவி, மஞ்சரி, ஆதியா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (29.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆவரங்கால் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**077 803 1056** **குடும்பத்தினர்.**

(CS 29375) S-1

## மரண அறிவித்தல்



### சரோஜினிதேவி சரவணமுத்து

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சரோஜினிதேவி சரவணமுத்து அவர்கள் நேற்று (27.02.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம் மற்றும் சுபத்திராதேவி, தனலக்சுமி, கமலேஸ்வரி, தேவகாந்தன், தமயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.02.2024) புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 41892) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். இந்தியத்துணைத்தூதரக

# கொன்சியூல் ஜெனரலாக சாய் முரளி பதவியேற்றார்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சியூல் ஜெனரலாக சாய் முரளி நேற்றுமுன்தினம் பதவியேற்றார்.

கொன்சியூல் ஜெனரல் ராகேஷ் நட்ராஜின் பதவிக் காலம் கடந்த 25ஆம் திகதி நிறைவடைந்த நிலையில், அவர் புதுடில்லிக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். இந்த நிலையிலேயே அந்த இடத்துக்கு சாய் முரளி நியமிக் கப்பட்டுள்ளார். 33 வயதான சாய் முரளி ரஷ்யாவில் உள்ள துணைத்தூதரகம் ஒன்றில் கொன்சி யூல் ஜெனரலாகப் பணியாற்றி வந்த நிலையில் அவர் யாழ். இந்தியத் துணைத்தூதரகத் துக்கு நியமிக்கப்பட்டுள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# சைக்கிள் திருட்டு: இருவர் மறியலில்

சைக்கிள்கள் திருடப்பட்ட குற்றச்சாட்டில் இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் மானிப் பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. மானிப்பாயில் சைக்கிள்கள் திருடப்பட்ட குற்றச்சாட்டில் 25 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரும் நேற்றையதினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே எதிர்வரும் மார்ச் மாதம் ஐந் தாம் திகதிவரை சந்தேகநபர்கள் இருவரை யும் விளக்கமறியலில் வைக்குமாறு மல் லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது. (ம-125)

## விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி - கோயிற்குடியிருப்பு-
ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலயத்தின்
100 அடி நீளமான மண்டபக் கூரை
(பனைமரம் - ஓடு கூரை) விற்பனைக்கு உண்டு.
ஆலய பரிபாலனசபை.

077 592 7840, 077 547 4188

## Vacancy far Saftware Developer & Data Analyst

**A USA-based company with offices in Colombo and Jaffna is looking for Candidates for the posts of Web Application Developer and Data Analyst to work at the Jaffna office.**

Qualifications:

- Degree in Computing/IT or equivalent experience
- Good knowledge of programming
- Knowledge in Database Management Systems
- Knowledge in Mobile programming is a plus

The Working hours would be from 9.00 am to 5.30 pm, weekdays only.

Send your CV to siva@monthlywarranty.com

(CS 54160) S-1

## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம்
## யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 14.03.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப் படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 15.03.2024 மற்றும் 16.03.2024**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் / பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி. |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல: 021-222 2601**

PEOPLE'S BANK
Pride of the Nation

## மரண அறிவித்தல்

பிறப்பு . 23 . 03 . 1948



இறப்பு . 27 . 02 . 2024

### திருமதி பரமானந்தம் திரவியம் (பரமேஸ்வரி)

மலேசியாவை பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமானந்தம் திரவியம் (பரமேஸ்வரி) நேற்று (27.02.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமானந்தம் (சினிமாஸ் லிமிரெட்) அன்பு மனைவியும், நடராசா (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சுப்பிரமணியம் (R.S.மணியம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அஜித்குமார் (வரி உத்தியோகத்தர், யாழ் மாநகரசபை; தலைமைக் காரியாலய ஆணையாளர், இலங்கைச் சாரணர் சங்கம்), சூரியகுமார் (1990 அம்புலன்ஸ்), நிரஞ்சனா (கனடா), சுமிதா (உப தபால் அதிபர் - பண்ணாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தாரணி (பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை - யாழ்ப்பாணம்), விஜயரமணி (கமநல சேவை நிலையம் - தொல்புரம்), சுதர்சன் (கனடா), கோபிகிருஷ்ணா (கணினி வரைகலை வடிவமைப்பாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அனோஷ் (கனடா), லதுஷ் (கனடா), பிரவீன், அஸ்வின், ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2024) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**

**குடும்பத்தினர்.**
**0771915509**

(CS/54159) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு . 14 . 10 . 1948



இறப்பு . 27 . 02 . 2024

### திருமதி சறோஜினி சிவானந்தன்

தலங்காவல் பிள்ளையார் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தன் சறோஜினிதேவி நேற்று (27.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி - சோதிமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - துரைக்கண்ணு தம்பதியரின் அன்பு மருமகளும், சிவானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், மகாலிங்கம், கமலாசினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராதாகிருஸ்ணனின் அன்பு மைத்துனியும், சிவாணி (இலிகிதர், இலங்கை போக்குவரத்து சபை, பிராந்தியக் காரியாலயம், வடக்கு), நவகாந்தன் (ஆசிரியர், யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), தாரணி (நியூசிலாந்து), பவதாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரஞ்சோதி (கணினி தொழிநுட்ப வியலாளர்), தவச்செல்வி (ஆசிரியர், யா / கொக்குவில் இந்துக் கல்லூரி), தயாகரன் (நியூசிலாந்து), கிசோக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சாருகேஸ், பார்ணிகா, கனிக்ஸ்ரா, அர்ச்சகன், ஜய்கிரன், வஜிறா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2024) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**தலங்காவல் பிள்ளையார் வீதி,**
**திருநெல்வேலி.**

(cs.7846) (N-1)

**குடும்பத்தினர்**
**077 993 1145**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.04.1947 | 23.02.2024 |



## திருமதி நித்தியலட்சுமி சண்முகராஜா

யாழ். ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, ஏழாலை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியலட்சுமி சண்முகராஜா கடந்த 23.02.24 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - மாணிக்கம் தம்பதிகளின் பாசமுள்ள மருமகளும், காலஞ்சென்ற சண்முகராஜா (பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும் , கௌசலா - இலண்டன், காலஞ்சென்றவர்களான சுதர்மன், துவாரகா மற்றும் மதுரா (ஜேர்மனி), ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், விஜிதரன் (லண்டன்), நந்தகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அறிவகனின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான கருணாநிதி, கருணானந்தம் மற்றும் தனலட்சுமி, பகவதி (கனடா), கருணாகரன், பவானி, மகாதேவன் (ஜேர்மனி), பாக்கியலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), நந்தினி (கனடா), சுகந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான கௌரி, பத்மலிங்கம், ஜெயராஜா மற்றும் கனகேஸ்வரி, இராமச்சந்திரன் (வர்த்தகர்), உஷாசுதாநிதி (ஜேர்மனி), ஜெயக்குமார் (ரொப் வைன் சொப் - தாவடி), சபேசன் (கனடா), சிவயோகன் (நோர்வே), சரோஜினிதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான விஜயராசா, நீலாயதாட்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தணிகாசலம் (பிரான்ஸ்), தனலங்கா (இந்தியா) ஆகியோரின் சகலியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.02.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு.
மகாதேவன் - 0049 176 204 65047
கௌசலா - 0094 770 045 198
மதுரா - 0049 155 6651 9642
தேனுசன் - 076 525 4172


தகவல்:
குடும்பத்தினர்

(CS29370 N-1)


# EDLOCATE'S STUDY ABROAD DAY IN JAFFNA

வெளிநாட்டுக்கல்விக்கான உங்கள் இலக்கினை எம்முடன் இணைந்து வெற்றியாக்கிக் கொள்ளுங்கள்.

2ND MARCH 9.00AM 2.00PM | UNIVERSITY OF JAFFNA PREMISES
ENTRANCE FREE




- Post study work rights after completion of studies.*
- PR pathway opportunities.*
- Enrol in over **100** plus Universities/Colleges in **07 Countries.**

முற்றிலும் இலவசமான கலந்துரையாடல்
DIPLOMA | DEGREE | MASTERS
UNIVERSITY PLACEMENT TO VISA IS FREE OF PROFESSIONAL FEE

edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

Pre-register by calling Priyanthy:
077 222 3178


# 10ஆம் ஆண்டு நினைவு

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

அமரர்

## நாகமணி சிந்தாமணி

அவர்களின் நினைவாக 28.02.2024

திதி: வெண்பா



மண்ணகம் 18.06.1925
விண்ணகம் 19.02.2014

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம்
அகன்றாலும்
ஆருயிர் அன்னையே...
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்...

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
சண்முகானந்தம் தயாநிதி
குடும்பத்தினர்
(விக்கி - கனடா)

(CS/29368) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஏ.சுமந்திரனின் தாயார் கொழும்பில் காலமானார்!



கொழும்பு, பெப். 28

தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் தாயார் புஷ்பராணி மதியாபரணம் (வயது-85) கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அவரது இறுதிச் சடங்கு தொடர்பான விவரங்கள் பின்னர் தெரியப்படுத்தப்படும் என்று குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். (ம-100-125)

## முன்னேறுகின்றது...

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுறுத்தல்களைப் புறந்தள்ளிய வகையிலேயே அந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட்ட காரணத்தால் சபாநாயகருக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக அதாவது சபாநாயகருக்கு எதிராக வாக்களிப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஓரணியில் இணைந்து வருகின்றன.

"அரசமைப்பு விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற சம்பிரதாயம், நீதிமன்ற உத்தரவைமீறும் வகையிலேயே சபாநாயகர் செயற்பட்டுள்ளார். எனவே, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நியாயமானது. ஆதலால், சபாநாயகருக்கு எதிராக நாம் செயற்படுவோம்" என்று ஜே.வி.பி.யின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமாக உள்ள அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், விமல்வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவநாணயக்கார உள்ளிட்டோர் அங்கம் வகிக்கும் உத்தர லங்கா சபாகய என்ற அரசியல் கூட்டணியும் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கத் தீர்மானித்துள்ளது. "சபாநாயகரின் செயற்பாட்டால் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்த அவர் தவறியுள்ளார். எனவே, உயர்நீதிமன்றம் முன்வைத்த பரிந்துரைகள் உள்ளடக்கப்படாமலேயே சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இது பொறுப்பற்ற செயலாகும். எனவே, இதற்காக சபாநாயகருக்கு எதிரான பிரேரணையை ஆதரிப்போம்" - என்று உத்தர லங்கா சபாகயவின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

**அரசின் பலத்தைக்காட்ட இதுவொரு சந்தர்ப்பம்!**

இதேவேளை - சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடித்து, தமது பலத்தை நிரூபிக்க ஆளுந்தரப்பும் மும்முரமாகச் செயற்பட்டுவருகின்றது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் பின்னர், "சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதனை அரசு தோற்கடிக்குமா?" என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். "நம்பிக்கையில்லாப் பிரேரணை வருவது நல்லது. அரசின் பலத்தைக் காட்ட இது ஒரு சந்தர்ப்பம். அதனை விவாதத்துக்கு எடுத்து மிக விரைவில் வாக்கெடுப்புக்குச் சென்றால் நாடாளுமன்றத்தில் எமது பலத்தைக் காட்டமுடியும்" - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## வலிந்து...

கொள்ளவேண்டும் என்று எச்சரித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன்.

மாதகல் சம்பில்துறையிலுள்ள விகாரையைச் சூழவுள்ள கடற்பிரதேசத்தில் கடற்றொழில் நடவடிக்கையை முன்னெடுக்க இலங்கைக் கடற்படையினர் தடைவிதித்துள்ளமை தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர்க்காலத்தில் எங்கள் கடற்பரப்பில் நாங்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு சிறிலங்காக் கடற்படையால் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இன்று போர் முடிந்துவிட்டது. சிவில் நிர்வாகம் ஏற்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகின்ற சூழலில் கடற்படையினர் சிவில் நிர்வாகத்தில் கடற்றொழில்நீரியல்வளத் திணைக்களத்தின் விவகாரத்தில் தலையிடுகின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பமாகியுள்ள காலத்தில், கடற்படையினரின் சிவில் நிர்வாகத்தின் மீதான தலையீடு கண்டிக்கப்படவேண்டும்.

தென்னிலங்கையில் பல இடங்களில் விகாரைகளைச் சூழவுள்ள கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அவையொன்றும் விகாரையின் அழகைக் கெடுக்கவில்லையா? தமிழர்கள் என்பதற்காகவே எங்கள் மீது எவ்வளவு காலத்துக்கு இவ்வாறான பாகுபாடுகளை மேற்கொள்ளப்போகின்றீர்கள்? விகாரைக்கு அண்மையாக மீனைக் கொல்லுவதாகக் கடற்படையினர் கூறுகின்றனர். வாழ்வாதாரத்தைக் கெடுத்து பட்டினிபோட்டு எங்களைக் கொல்லச் சொல்லியா உங்கள் புத்தபெருமான் உபதேசித்திருக்கின்றார்?

சம்பில்துறையில் பல தலைமுறைகளாக எமது மக்கள் தொழில் செய்து வருகின்றார்கள். எப்போதும் இல்லாது திடீரெனக் கடற்படையினர் அந்தப் பகுதியில் கடற்றொழிலை முன்னெடுக்கத் தடை விதிப்பது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. ஏற்கனவே அந்த விகாரைக்கு அண்மையாக, எங்கள் மக்களின் காணிகளை அத்துமீறிப் பிடித்த கடற்படையினர் விடுதியை அமைத்து சிங்களவர்களைத் தங்க வைக்கின்றனர். இப்போது எங்கள் கடலையும் கையகப்படுத்தி அதிலும் விடுதி அமைக்கப்போகின்றார்களா என்ற நியாயமான சந்தேகம் எழத்தான் செய்கின்றது.

அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தமுடியாத - கையாலாகாத கடற்படையினர் எங்கள் மக்களிடம் மாத்திரம் தங்கள் வீரத்தைக் (?) காட்டுகின்றனர். நீங்கள் எங்கள் வாழ்வாதாரத்தில் வயிற்றிலடிப்பதை மக்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று நினைக்கவேண்டாம். அமைதியை விரும்பும் எங்கள் மக்களை வலிந்து சீண்டுகின்றீர்கள். விளைவுகள் விபரீதமாக இருக்கும் என சிறிலங்கா கடற்படையை எச்சரிக்க விரும்புகின்றேன் - என்றுள்ளது. (அ-ம-125)

## தனியார்...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை அடுத்து யாழ். மாவட்ட தூர சேவைச் சங்கத்தின் பேருந்து உரிமையாளர்களும், ஏனைய மாவட்டச் சங்கப் பிரதிநிதிகளும் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 8 மணிக்கு மின்சார நிலைய வீதித் தரிப்பிடத்துக்குச் சென்றிருந்தோம். அப்போது அமைச்சர் எமது தரிப்பிடம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சேவைகளுக்கு இடையூறாக இருப்பதாகவும், அதனால் சேவையில் ஈடுபடுவதற்காக நிற்கும் பேருந்துகளை அவ்விடத்தில் தரித்துநிற்கவேண்டாம் எனப் பொலிஸாரின் முன்னிலையில் தெரிவித்தார். அத்துடன் அவ்விடத்தில் 'தரித்து நிற்கத் தடை' (நோ பார்க்கிங்) என்ற அறிவிப்புப் பலகையும் வைத்துள்ளனர். ஏற்கனவே இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒத்துழைப்பின்மையால், அவ்விடத்தில் இருந்து தூரசேவைகளை மேற்கொள்ளமுடியாதுள்ளது. வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை எம்மிடம் இருந்து பணங்களை அறவிடுவதில் மட்டும் விழிப்பாக இருக்கின்றது. ஆனால், எமக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் அசமந்தப் போக்கில் இருக்கின்றது. அமைச்சருக்கு விடயத்தைத் தெளிவுபடுத்தி எமது தரிப்பிடத்தில் இருந்து சேவையை வழங்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால், நாளைமுதல் (இன்று) நாங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தூரசேவைகளுக்கான தனியார் போக்குவரத்துச்சேவைகளும், இலங்கைப்போக்குவரத்துச் சபையின் தூரசேவை களும் இணைந்து புதிய தரிப்பிடத்தில் இருந்து சேவைகளில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகும் வரை வடமாகாணத்துக்குள்ளான அனைத்து தனியார் போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம் - என்றார். (அ-ம-100-125)

## தனியார் பேருந்தின்...

இந்த விபத்துத் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வடபிராந்தியத் தலைவருக்கு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையிலேயே விசாரணை நிறைவடையும் வரையில் தொடர்புடைய பேருந்தின் வழித்தட அனுமதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வடபிராந்திய தலைவரால் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

"பயணிகளின் நலனை முன்னிறுத்திப் பணியில் ஈடுபடுமாறு வடமாகாண தனியார் பேருந்துகளின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவுறுத்தலுக்கு அமையச் செயற்படாத பேருந்துகளின் வழித்தட அனுமதி இரத்துச் செய்யப்படும்" என்று பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வடபிராந்தியத் தலைவர் இது தொடர்பில் தெரிவித்தார்.

அல்லைப்பிட்டியில் பேருந்தில் இருந்து இறங்கமுயன்ற பெண்ணொருவர், தவறி விழுந்து உயிரிழந்த விபத்தில் தொடர்புடைய தனியார் பேருந்தின் வழித்தட அனுமதியும் ஆளுநரின் உத்தரவின் பேரில் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தூக்கிலிருந்து...

களின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். நீண்டநேரமாக அவரைக் காணவில்லை என்று கணவர் தேடியபோது குளியலறைக்குள் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் தமது விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

## கிளிநொச்சியில்...

கால்நடை வளர்ப்பாளர்களும் பண்ணையாளர்களும் தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி, கண்டாவளை கால்நடை மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு, தர்மபுரம் பகுதியில் பெரியம்மை நோய்த்தாக்கத்தைத் தீவிரமாக அவதானிக்கமுடிகின்றது. கடந்த வருடமும் இந்த நோயால் கால்நடைகள் பெரும் அவதிக்குள்ளான நிலையில் இந்த வருடமும் அந்தத் தொற்று கால்நடைகளிடையே விரைவாகப் பரவிவருகின்றமை பண்ணையாளர்களைக் கவலையடையச் செய்துள்ளது.

கால்நடைகளுக்கு, உணவில் நாட்டமின்மை, எழுந்து நடக்க முடியாத நிலை, கொப்பளங்கள் உருவாகி பெரிய காயங்கள் ஏற்படுதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கால்நடை மருத்துவர்களை அணுகி உரிய அறிவுறுத்தல்கள் மற்றும் பராமரிப்பைப் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-113)

## எய்ட்ஸ்...

"யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஐந்து பேர் எய்ட்ஸ் தொற்றாளர்களாகக் கடந்த வருடம் அடையாளப்படுத்தப்பட்டனர். அவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் குறித்த நோயின் தாக்கம் இறுதிக்கட்டத்தை எட்டிய நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்" என்றும் அந்தத் தரப்புகள் தெரிவித்துள்ளன. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயோதிபத் தம்பதியை வதைத்து பணம், நகைகள் கொள்ளை!

## கிளிநொச்சி - நாச்சிக்குடாவில் இழிசெயல்

**கிளிநொச்சி, பெப். 28**

**கிளிநொச்சி - நாச்சிகுடாவில் வயோதிபத் தம்பதியர் தனித்து வசிக்கும் வீட்டுக்குள் நுழைந்து, 10 பவுண் நகைகள், மோட்டார்சைக்கிள், பணம் என்பவற்றை வாள்முனையில் மூவரடங்கிய குழு கொள்ளையடித்துச் சென்றுள்ளது. இந்த இழிசெயல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.**

தொழில் நிமித்தம் மகன் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும், மகள் மட்டக்களப்பிலும் வசித்துவந்த நிலையில் 62 வயதான கணவனும் 58 வயதான மனைவியும் தனித்து வசித்து வந்துள்ளனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்த மூவர் அடங்கிய குழுவினர் வயோதிபத் தம்பதியினரை வாள்முனையில் மிரட்டியதுடன் வீட்டில் நகைகள் இருக்கும் இடத்தைத் தெரிவிக்குமாறு கம்பியுடன் கட்டிவிட்டுத் தாக்கியுள்ளனர். சுமார் 4 மணிநேர சித்திரவதையின் பின்னர் தொடர்ந்தும் சித்திரவதையைத் தாங்க முடியாது நகைகள் இருக்கும் இடத்தை அந்தத் தம்பதியர் தெரிவித்ததையடுத்து நகைகளையும் பணத்தையும் வீட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளையும் அவர்கள் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட தம்பதியர் அண்மையில் சிலுவைப்பாதைக்காகச் செல்லும்போது அணிந்துசென்ற நகைகளை ஒளிப்படம் எடுத்துவைத்திருந்து அந்தப் படத்தைக் காட்டி படத்திலுள்ள நகைகளைத் தருமாறு கோரியே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் முழங்காவில் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-125)

# அவகாசத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டும் திட்டமுன்மொழிவை அனுப்பாத எம்.பி.க்கள்

யாழ்ப்பாணம் மாவட்டம் தொடர்பான ஒதுக்கீடுகளில் தமது பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் இடம்பெற வேண்டும் என்றும் அவற்றைச் சமர்ப்பிப்பதற்காக வாய்ப்பளிக்குமாறும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவகாசத்தைப் பெற்றுக்கொண்ட நிலையில், இதுவரை சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது முன்மொழிவுகளை வழங்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இறுதியாக இடம்பெற்றபோது, தமக்குத் தெரியாது பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை நடத்தி நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதாக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர். இதனால் தமது முன்மொழிவையும் சேர்க்கவேண்டும் என்று வலியுறுத்தி ஒருவாரகால அவகாசத்தையும் பெற்றுக்கொண்டனர். எனினும் தற்போது ஒருவாரகாலம் தாண்டியுள்ள போதிலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கவில்லை என்று மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை- சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க அதிகமான முன்மொழிவைக் கோரியுள்ளனர் என்றும், யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சாராத வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தன் கட்சி சார்ந்து முன்மொழிவை அனுப்பிவைத்துள்ளார் என்றும் மாவட்டச் செயலகத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இவ்வாறான முன்மொழிவுகள் காலதாமதமாகுவதால், ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் அடுத்த திகதியைத் தீர்மானிப்பதற்குச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-125)


### ஆசிரியர் தேவை

O/L இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவிக்கு விஞ்ஞான பாட முக்கிய பகுதி, வினா-விடை ஆகியவை கற்பிப்பதற்கு விஞ்ஞான பாட ஆசிரியர் தேவை.

077 675 1649

### விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்.

தொடர்புகளுக்கு:- (CS/29371) J-1

074 173 7684

### உங்கள் வீட்டிலேயே மருத்துவ சிகிச்சையை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

077 495 5606

Be treated at your home

For More Details whatsapp

### விற்பனைக்கு

Restaurant ஒன்றிற்குத் தேவையான தளபாடங்கள்/ உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

- Large Upright Chillers
- Food Chiller
- Salad Dispenser
- Large Fridges
- Bottle Cooler
- Deep Fryer
- Cookers
- Table
- Grinder
- Deep Freezers
- Large Gas Cylinder
- Burger Plate with Cooker

(CS 54124) S-1

தொடர்பு எண்: 077 653 3221

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாய் நகரில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் ஒரு பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

விலை பேசித் தீர்மானிக்கலாம். (தரகர் தேவை இல்லை). (CS/29373) J-1

077 809 3293, 076 270 2176

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பிரதேசத்தில் நடைபெற்றுவரும் கட்டுமானப் பகுதிக்கு பின்வரும் கடமைகளுக்கு வேலையாட்கள் தேவை.

- இரவுக் காவலாளி
- காணி பராமரிப்பாளர்

(தங்குமிட வசதி வழங்கப்படும்)

**மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் தகுந்த உடல் ஆரோக்கியத்துடன் இருப்பது அவசியம்.**

**0765469030** என்னும் **Whatsapp** இலக்கத்திற்கு சுயவிபரங்களை 05.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும். (CS/54152) J-1

### தவறவிடப்பட்டுள்ளது

**27.02.2024** அன்று வைத்திய தேவைக்காக அடகு வைப்பதற்குக் கொண்டு சென்றபோது **புத்தூருக்கும், வேம்படிச்சந்திக்கும்** இடைப்பட்ட பகுதியில் **கைச்சங்கிலி தவறவிடப்பட்டுள்ளது.** கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS/54151) J-1

075 237 1709, 074 331 3258

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் - கைதடி வீதி முகப்புடன் ராஜவீதி சந்தி, உரும்பிராய் கிருஸ்ணன் கோவிலடியில் 06 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.


(வலிகாமம் வடக்கு இடம் பெயர்ந்தோர் தங்கிய இடம்) (CS/54073) J-1

தொடர்புகளுக்கு:-

077 353 4854, 074 338 2978


## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 04 . 1934



மறைவு 27 . 02 . 2024

### முருகேசு கந்தசாமி

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், பலாலி கிழக்கை வதிவிடமாகவும், பன்னாலை தெல்லிப்பளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி அவர்கள் நேற்று (27.02.2024) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சின்னையா - நாகம்மா தம்பதிகளின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், தவமணி, லோகநாதன் ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரி, பாலசுப்ரமணியம், காலஞ்சென்ற பொன்னம்மா, பொன்னம்பலம், சிவபாக்கியம், செல்லம், பாலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், தயாநிதி, கலாநிதி (பிரான்ஸ்), பார்த்தீபன் (லண்டன்), மோகன், அசோகன், திலீபன் (காமாட்சி கடை உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரணவன், பிரவீணன் (கொழும்பு) ஆகியோரின் பெரியப்பாவும், ஸ்ரீதரன், நடனசபேசன் (பிரான்ஸ்), ரிஷானி (லண்டன்), சியாமினி ஆகியோரின் மாமனாரும், திலக்ஷி, ரிஷிதரன், திரிஷா, நவினா, கபிலன், ஆதீஷ், அகிஸ், அனிக்கா, டிலக்ஷனா, அபிஷா, அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.02.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் (பன்னாலை) இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பன்னாலை, தெல்லிப்பளை.**
**077 101 6296**
**077 345 0009**

**தகவல்: குடும்பத்தினர்.** (CS 29377) S-1



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org